# பாடசாலையில் (இரண்டு கலாச்சாரங்களுக்கு இடையில்) மொழிபெயர்த்துக் கூறுவது
## பெற்றோருக்கான தகவல்கள்

**மதிப்பிற்குரிய பெற்றோர்களே**

**பாடசாலையில் பெற்றோரின் ஒத்துழைப்பு மிக முக்கியம். அவர்கள் பாட-சாலையில் பேச்சுவார்த்தைகளில் உற்சாகமாக பங்குபற்றினால், அவர்களால் அவர்களினுடைய பிள்ளைக்கு சரியான முறையில் உதவ முடியும். பள்ளிக்கூட விஷயங்களும் அதோடு நிலமைகளும் அடிக்கடி சிக்கலாக இருக்கும். இந்த மொழிபெயர்த்துக் கூறுவதால் பாடசாலைக்கும் அதோடு சிறிதளவிலிருந்து ஓரளவு டொச் தெரிந்த பெற்றோர்களுக்கும் இடையில் கருத்துப்பரிமாற்றம் செய்வது (தொடர்பு கொள்வது) சாத்தியமாகும்.**

**யார் இந்த மொழிபெயர்ப்பாளர்கள்?**
**இந்த மொழிபெயர்ப்பாளர்கள் இந்த வேலைக்காக விஷேஷமாக கற்றவர்கள் மேலும் டொச்சிலும் அதோடு வேறு ஒரு பாஷையிலும் நல்ல பாஷை அறிவை பெற்றவர்கள். இவர்கள் ஆசிரியருக்கும் அதோடு உங்களுக்கும் இடையே நடக்கும் உரையாடலை முழுமையாகவும் அதோடு சரியாகவும் மொழிபெயர்ப்பார்கள். இந்த மொழிபெயர்ப்பாளர்களுக்கு சுவிஸ் கல்வி முறைக்கும் அதோடு அவர்களுடைய தாய்நாட்டு கல்வி முறைக்கும் உள்ள வித்தியாசம் தெரியும். அதனால் அவர்களால் உங்களுக்கும் அதோடு ஆசிரியருக்கும் இரண்டு கல்வி முறைக்கும் உள்ள ஒற்றுமைகளையும் அதோடு வித்தியாசங்களையும் புரிந்து கொள்ளுகின்ற முறையில் விளக்க முடியம். இந்த மொழிபெயர்ப்பாளர்கள் நடுநிலையாகவும் அதோடு தொழில் இரகசியத்தை காப்பாற்றுவதற்கும் (அதாவது உங்களுக்கிடையே நடந்த உரையாடலைப்பற்றி வேறு ஒருவருக்கும் சொல்ல மாட்டார்கள்) கட்டுப்பட்டவர்கள்.**

**இந்த மொழிபெயர்ப்பாளர்களை அழைப்பதற்கு எப்போ சிபாரிசு செய்யப்படும்?**

**பாடசாலையில் நடக்கும் முக்கியமான பேச்சுவார்த்தைகளுக்கு நீங்கள் அல்லது ஆசிரியர் ஒரு மொழிபெயர்ப்பாளரை கேட்கலாம் - இது விஷேஷமாக கீழ்வரும் நிலைமைகளுக்கு சிபாரிசு செய்யப்படும்:**

- **கின்டர் காடன் அல்லது ஆரம்பப் பாடசாலைக்கு போக ஆரம்பிக்கும்போது**
- **ஒரு பிள்ளையின் படிப்பின் நிலைமையையும் அதோடு பிள்ளையை படிப்பில் ஊக்குவிப்பதைப் பற்றியும் பெற்றோருடன் பேச்சுவார்த்தை செய்வதற்கு**
- **அறிக்கையைப்பற்றி (ரிப்போட்) பேசும்போது**
- **பள்ளிக்கூட விஷயங்களைப்பற்றி தீர்மானிக்கும்போது (மேல்வகுப்புக்குரிய உயர்வு- அதோடு மாற்றுவதை தீர்மானிக்கும்போது)**
- **படிப்பு சம்மந்தமான விஷயங்களைப்பற்றிப் பேசுவதற்கு அதோடு விஷேஷமாக ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு**
- **முக்கியமான படிப்பு- மேலும் வளர்ப்பைப் பற்றிய கேள்விகளுக்கு**
- **ஒரு இளவயதினருக்கு வேலையை தெரிவுசெய்வதைப் பற்றி பேசும்போது**

**இந்த மொழிபெயர்ப்பாளர்களுக்கு பாடசாலை நிர்வாகத்திடமிருந்து இந்த வேலைக்கான விண்ணப்பம் கிடைக்கும் மேலும் இதற்கான சம்பளம் நகரசபையிலுள்ள பாடசாலை விவகாரங்களைக் கவனிக்கும் பிரிவிலிருந்து கிடைக்கும்.**

**பெற்றோருக்கான மேலதிக முக்கியமான தகவல்கள்**

- **ஆரம்பப் பாடசாலை அலுவலகத்தின் இணையத்தளப் பக்கத்தில்** International **என்ற பகுதியில் நீங்கள் 10 பாஷைகளில் எழுத்து மூலமாக மொழிபெயர்க்கப்பட்ட ஆரம்பப் பாடசாலையின் முக்கியமான விஷயங்களைப்பற்றிய பெற்றோருக்கான தகவல்களைக் காணலாம்:** http://www.vsa.zh.ch/translations
- **தகவல்கள் „சூரிச் மாநிலத்திலுள்ள பாடசாலைகள்“ என்ற** DVD **இலும் உள்ளன இதை சூரிச் மாநிலத்திலுள்ள கற்பிக்கும் பொருட்களுக்கான பிரசுராலயத்தில் பெறலாம்.** DVD **ஐப் பற்றிய எழுத்துமூலமான அதோடு மொழிபெயர்க்கப்பட்ட மேலதிக பொருட்களை நீங்கள் கீழ்வரும் இணையத்தளப் பக்கத்தில் காணலாம்:** http://www.vsa.zh.ch/dvd